913.
4 39

உ

வேலுமயிலுந்துணை

அகத்திய முனிவர்

அருளிச்செய்த

ஆறெழுத்தந்தாதி

2395
OFFICE OF THE RE...
25 NOV 1939
MADRAS

முருகவேள் புத்தகசாலை,

இராயப்பேட்டை, சென்னை

1939

விலை அணா 2.

உ

வேலுமயிலுந் துணை

ஆறெழுத்தந்தாதி

விநாயகர்

கற்பகமி ருக்கத்தன் கந்தமிகு நந்தவனப்
பொற்பகமி ருக்கப் பொதிகைமுனி—நற்கரகத்
தண்ணீரை யாதரித்த ஐந்துகரன் காப்பாமெம்
எண்ணீரை யாறெழுத்திற் கே.

முருகர்

ஆறு முகமுண்டு பன்னிரு தோளுமுண் டங்கையினில்
ஏறிய வேலுண்டு வெற்றிம யூரமுண் டேவல்செய்ய
மீறிய சிங்கத் துரைவீர வாகுண்டு வேளைக்கிங்கே
கூறிய போது வருவான் குமர குருபரனே.

நூல்

ஆனந்த மாறெழுத் தாலய மாமென தங்கமெல்லாந்
தானந்த மாதி முதற்பொரு ளாகிச்சத் தாங்கமுநீ
மோனந்த முன்னுள தென்னுள துன்னுள தென்னுளதால்
ஈனந்தம் போக்கி யெனைநீய தாக்கிய என்குருவே. 1

என்குரு வேக்ருபை யாநந்த மோன மெழிற்சிவனர்
தன்குரு வேபரை யீரா று கோலஞ் சமைந்தநமைப்
பின்குரு வேவிந்து நாதம் பரம்பெரும் பேரொளிக்கு
முன்குரு வேமுரு கோனு றெழுத்தென்னு மூலங்களே. 2

மூலங்க ளேசிவஞ் சத்திவித் தாயுன்னும் முன்பிறந்த
சீலங்க ளேபஞ்ச கர்த்தாவு நின்வழித் தேறியொரு
காலங்க ளேயொக்க வேகக் கருப்பக்க டையினின்ற
கோலங் களேமுரு கோனு றெழுத்தின் குணக்குன்றமே.

குணக்குன் றமேயன்ப ருள்ளூ டுருவிக் குமுகுமென [கங்
மணக்குன் றமேமுரு காவென்றன் கன்மத்தை மாற்றிடுங்
கணக்குன் றமேயெங்கு மாறெழுத் தாயுருக் காட்டியபொற்
சுணக்குன் றமேயண்ட பிண்டமொன் றுய்நின்ற சூத்திரமே.

திரமே முருகநின் னுறெழுத் தங்கிதஞ் சிந்தைபற்றிப்
பரமே யிதென்றுள் ளுணர்ந்தோர்க்கு மன்பர் பழவினைநிட்
டுரமே சிதையும் பிறப்பறுங் கூற்று மொழியுநில
வரமேயெக் காலமுஞ் சாகார் சிவசித்தர் மானிலத்தே. 5

நிலத்தே யிறப்பும் பிறப்பு மறுக்கன்ம நீங்குமிப்பூ
தலத்தே மிதக்கினு மேமுரு காவென்றுன் னுறெழுத்தைப்
பிலத்தே பிடித்தவர்க் கப்பால்நின் னுநந்தப் பேருளிரச்
சலத்தே மிதப்பரல் லாற்பின்னை வேறுந் தடையிலையே. 6

தடையாது பாசத் துருகாது மாயைச் சரமறுகில்
உடையாது காய முலையாதுள் ளாவி யுலகிலினிப்
படையா தயன்கைப் பவநீக்கி ஞானப் பரத்துறைவாழ்
அடையாளஎங் கெங்குஞ் சிவமாகக் காட்டுநின் னுறெழுத்தே.

ஆறெழுத் துண்மை யறியார்கள் கன்ம மறுக்கஅப்பால்
வேறெழுத் தில்லைவெண் ணீறில்லை மால்சிவ வேடமில்லை
தேறெழுத் தேதயன் கையுங் கருக்குழிச் சேறலும்பின்
மாறெழுத் தந்தகன் தென்புலத் தேயென்றும் வெளவுவதே.

வவ்வுநின் ருட்கன் பிலாதே நரகத்தை வெளவும்வஞ்சர்க்
கெவ்வழி மோக்கத்திற் கேதுவென் றுலெழுத் தாறுளநின்
சவ்வுரவ் வவ்வுணவ் பவ்வுவவ் வக்கரந் தன்னிலொன்றைக்
கவ்வுவர் கவ்வுவர் சொற்பிறந் தாற்றிரங் காட்டுமதே. 9

கதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேவச்ர காயந்தரும்
நிதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேயுள் நிரப்பும்அருள்
மதிகாட்டு மோரெழுத் தோரெழுத் தேயென்னுள் வைத்தபொற்றுள்
துதிகாட்டு மேகுக நின்னு றெழுத்துள்ள சூத்திரமே. 10

சூத்திர நம்முடற் சக்கர மேருவைச் சுற்றியரை
மாத்திரை யிற்சந்த்ர சூரியர் போல்வரும் வாசிதனைக்
காத்திர வாய்மட் டியோகத் திருந்துங் கருமவுனச்
சாத்திரங் கைவரும் நின்னு றெழுத்துந் தரிநெஞ்சர்க்கே. 11

நெஞ்சே பொற்பீடகந் தேகஞ் சிவாலயம் நீள்பொறிகள்
அஞ்சே யிவைபெறு மாதாஞ் சத்தி யருள்நிலைவிட்
டுஞ்சா துணர்வு முருகன்ற னுறெழுத் துன்னுவர்க்கும்
செஞ்சே வலன்றன் றனக்குஞ் சரீரமுஞ் சித்துமொன்றே.

ஒன்றே முருகநின் னுறெழுத் தோசை யுலகமெல்லாம்
நின்றே பலபொருள் நீயென்று நானென்று நீதிவெவ்வே
றன்றே சமயங்க ளோராறு மாய்நின்ற ஆநந்தநீ
என்றே தெளிந்தவர்க் கேகன்மம் மாயை இருள்றுமே. 13

இருளறு மெங்கு மொளியாய் நிரம்பு மிரவுபகல்
மருளறு மாயுளும் விர்த்திக்குங் கர்த்தன்மட் டற்றுயர்ந்த
பொருளறு கோணத்தி னுள்ளே யரிய பொறியுளம்நின்
றருளரு ளுசல வேல வுனதெழுத் தாறுன்னவே. 14

உன்னரி தாம்முரு கோனு றெழுத்தினை யுச்சரித்தார்க்
கென்னரி தாம்பொரு ளொன்றிலை யேயிறப் பும்பிறப்பும்
பின்னரி தாமிவை யேதென் று பேசிற் பிரமனிடந்
தன்னதி காரமுந் தப்பியப் பால்நின்ற தானவனே. 15

தானவ னுதிவி நாயகன் நான்முகன் சங்குசக்ர
வானவன் ருத்ரன் மகேஸ்வரன் ஈசன் வடிவிவையே
ஆனவ னாறு முகத்தன் பரசம யத்தன்முரு
கோனவ னின்னெழுத் தாறே பொருளெனக் கொண்டனனே.

கொண்டனை கையிற் பொறைவேலன் பின்புறு கொக்கிரண்டாய்க்
கண்டனை மஞ்ஞையுஞ் சேவலு மாய்வரக் காரணத்திற்
பண்டனை யாதி பகவனிப் போதவன் பாலனென
விண்டனை யாறெழுத் தாய்முக மாறுடன் மேவியதே. 17

மேவிய வாதி சிவாய சதாசிவ வேலைதனில்
ஆவிய நம்பெரு மான்முரு காவென் றுன் னுறெழுத்தே
தாவிய வுள்ளம தாகவெண் ணீற்றைத் தரித்துனையே
கூவிய பேர்கண்முன் னஞ்சலென் றேவந்து கூடுவையே.

கூடுவை யன்பருள் ளாலய மாமெனக் கூடியிருந்
தாடுவை நீமுரு கோனு றெழுத்தினை யாரொருவர்
நாடுவர் நீயவர் கன்மந் தொடைத்து நரகரித்துப்
போடுவை நீயென்று கண்டோ ரடைவர்நற் புத்தியிதே. 19

புத்தியும் நீமுரு கோனு றெழுத்தின் பொருளறியச்
சத்தியும் நீசிவ மாயெங்கு மாய்நின்ற சர்வமுகச்
சித்தியும் நீயன்பர் பார்க்கின்ற ஞானத் தெளிவுதரும்
முத்தியும் நீயன்றி வேறில்லை வேத முடிந்திடமே. 20

முடிந்திடம் பேச்சற்ற மோனமெய்ஞ் ஞான முதல்வனினைப்
படிந்திட மேபதி பாசம் பசுஇருட் பற்றற்றதும் [வையுங்
விடிந்திடந் தானென்னும் நானென்னும் மாயையும் விட்டெ
கடிந்திடத் தப்புறத் தப்புறத் தாநந்தங் காணுமதே. 21

காணுமென் பான்முரு கோனு றெழுத்தின் கனியையுண்டே
பூணுமென் பாலைம் புலனுமொன் றுய்ச்சரம் பூரித்துள்ளாய்த்
தோணுமென் பாலிற் றயையூ டசைவற்ற சோதியொத்தால்
ஆணுமென் பார்பெண்ணு மென்பார்நின் பாலன் றறிவதுவே.

அறிவது வேதநின் னூறெழுத் தைந்தெழுத் தாலதிலே
பிறிவது மவ்வெழுத் தண்டபிண் டத்திற் பெருஞ்சித்திவாய்
செறிவது மப்பத நின்றோ ரெழுத்துத் திகாந்தமுட்டி [ச்
மறிவது கண்டுதன் னுள்ளே தெளிந்த மவுனங்களே. 23

ஏதான ஆறெழுத் துள்ளேந் தெழுத்தன் றெடுத்ததெல்லாஞ்
சூதாக நானென் றுருப்பண்ணும் வார்த்தையைத் தூக்கு
ஆதார மாகி யகமும் புறமு மருவுருவாம் [தற்கோர்
ஓதா வுணர்வு முயிரும தாய்நின்ற தோரெழுத்தே. 24

ஓரெழுத் தாதி நிராமயம் ஐவரு முன்னரிய
பேரெழுத் தவ்வெழுத் தேயம்மை தேவி பிறங்கவள்பால்
ஆறெழுத் துஞ்சடை வானவர் தாமவ ளோடுதம்மைச்
சீரெழுத் தாறுமோர் வேலா யெடுத்த திருவுருவே. 25

திருவுரு வாகிய செவ்வேள் முருகன்நஞ் சிந்தையுள்ளே
அருவுரு வாய்நின்ற ஆறெழுத் தாயுன்னை ஆண்பெண்ணிதென்
றொருவுரு வாய்க்கொள்ளப் போகா தவரவ ருள்ளத்திலே
கருவுரு வெப்படி யப்படி யேநின்ற காரணமே. 26

காரண காரியமி ரண்டையுந் தாங்கிக் கடவுள்முன்னாட்
பூரண ஞான முகமாய்ப் ப்ரவேசிப்பப் பொங்கழலை
ஆரணங் காப்ப தெனவே யருவுரு வாயநந்த
நாரண ரூபமுஞ் சங்கர வேடமு நண்ணினதே. 27

நண்ணின ஆறு முகமாய் முருகன் நமதுளத்தில்
எண்ணின காரிய மெல்லாந் தரும்பொரு ளெல்லையில்லாக்
கண்ணின னாறெழுத் தானமெய்ஞ் ஞானக் கரும்புயர்ந்த
மண்ணினும் விண்ணினும் யாவு மொன்றாய்நின்ற மாமயமே.

மாமய மாமுரு கோனா றெழுத்துமட் டற்றஅரி
ஓமய மாமவ்வு முவ்வும தாய்ச்சுழித் தோங்குமுச்சிப்
பூமய மாய்ச்சிவ மாய்ப்பரை யாய்ப்பற் பொறியொடுநி
ராமய மாயெங்குந் தானா யிருந்த ரகசியமே. 29

ரகசிய மாமுரு கோனா றெழுத்தையும் நம்பினர்க்குச்
சுகசெய் மன்றி யபசெய மில்லைத் தொழிற்படுத்துன்
முகசெயுந் தம்பந மோகநம் பேதந முன்னளிப்போ
டகசெய முச்சமுஞ் சங்கார மெட்டிற்கு மாதியதே. 30

ஆதிபரை கங்கை தெய்வானை வள்ளி யரன்முருகன்
சோதி முகமைந்து மாறு முகமழுச் சூர்க்கதிர்வேல்
கோதி லிடப மயில்கொன்றை மாலை குளிர்கடப்பம்
ஓதிய அஞ்செழுத் தாறெழுத் தாஞ்சுட ருற்பவமே. 31

சுடர்சங்கு சக்கரம் வேற்சூல் மழுவிற் சுரிகைகுளிர்
அடர்தண்டு தண்டுகு டாரம்விட் டேற்றரி வாள்கரகம்
இடர்துஞ்சு பாச மெரிபாரை மானே டிரா.றுகையும்
படரும் படிப்பொங்கி யாறெழுத் தங்கி பரந்ததுவே. 32

பரந்தந்த ணன்செய்கை பல்லா யிரமும்பட் டுடுருவி
நிரந்தந்த ரஞ்சிரம் பாதலம் பாதநின் ரோர்முகமாய்த் [நடித்
துரந்தன்றி யாவையுஞ் சூர்க்களு மெற்றித்தொம் மென்ன
தரஞ்சுந்த ரஞ்சங்க ரஞ்சம்பு வாய்நின்ற தாறெழுத்தே. 33

எழுத்தாறு மொன்றுபட் டேகிக் கருத்து ளெழுந்ததொனி
வழுத்தாது மூல முருகன்பொற் றுடனே வைத்துளத்தே
பழுத்தோகை யன்பொ டிரவும் பகலும் பரமுனக்கென்
றழுத்தாது சத்தப் பிறவிக் கடல்விட் டகலரிதே. 34

பிறவிக் கடற்குடற் சக்கர மாவி பெருஞ்சரக்கில்
அறவித்த பத்தொன்ப தாறுமச் சாணி அயன்கையினுல்
உறவித்த மந்திர மூன்றும்நங் கூரமுன் அஞ்செழுத்துந்
துறவித்த வொட்டன் குகனு றெழுத்தின் சுயகர்த்தனே. 35

கத்தன் பரங்கிரி சீரலை ஏரகங் காண்பலகுன்
றத்தன் தென்சோலை மலையாவி னன்குடி யாறுமென்பர்
வித்தென்ப தாயென்னு ளாதார மாறும்வெவ் வேறுருவாம்
பித்தன் சருவ குருவாஞ் சடாக்கரப் பேரொளிக்கே. 36

குருவா னஐயன் சடாக்கரத் தாகமங் கூறிமுன்னே
அருவான வெட்ட வெளிபா ழுரையுணர் வற்றவிடம்
பெருவா னறிவு தெளிவா யளவற்ற பேரொளியாய்
உருவா னதீத முருவாம் படிக்கனி வுற்றதுவே. 37

உற்றது மெவ்விட மிவ்வண்ண மின்னதென் றோதநினைப்
பற்றது பற்றற் றதும்மனப் பாவக மானதெங்கே
பெற்றதெவ் வந்தரமோ மூச்சுவிட் டதுபின் பசைவாய்ச்
சொற்றது சொற்றிடத் துண்டுளங் தேக்கித் துணுக்கென்றதே.

துணுக்கென் றுயமுன் சரணஞ் சரணெனத் தோற்றியொரு
கணுக்கிண் டிலையுடன் பூத்தது காய்த்துங் கனிவடிவாய்த்
திணுக்கென் றுள்ளூடெழுஞ் செக்கரும் பச்சையுந் திங்களுமாய்
அணுக்கண்ட துண்டிலை யென்றே நிசபர மானதுவே. 39

பரமான தாதி சிவமாதி சத்தியுற் பத்திமுத்தி
உரமான பார்வை யுறுவிந்து நாதத் துதிமௌனந்
திரமான சற்குரு தேசிக நாமந் திடாரித்தநந்
தரமா மகார முகாரமோங் காரித்துச் சத்தித்ததே. 40

சத்தித் ததளவன் றுரு யவனவள் தன்வடிவாய்
முத்தித்த பிச்சை முழுமுத லாய்ச்சண் முகவடிவாய்
அத்தித் தறுசம யத்தொழி லாறுக்கும் ஆறெழுத்தாய்ச்
சித்தித்தென் ஞுவி விளையாட லண்டத்தின் செய்கையதே.

அண்டத்தி லுள்ளது பிண்டத் திலுமுண்டவ் வாறெழுத்தும்
பண்டித்த தற்சத கோடி மகாசித்தி பண்ணுதற்காய்த்
துண்டத் துடலுயி ராய பரைசெய்த சூத்திரத்தாற்
கண்டித் தநம சிவாயா வெனவுருக் காட்டியதே. 42

உருவான மூல மதுவட்ட நாலித ழுள்ளின்முக்கோ
டருவாம் பிரணவச் சத்தியுட் சவ்வுஞ் சருவமயக்
குருவாம தோமுக மவ்வே தியானங் குளிர்ந்தலிங்கம்
அருவா மவையிவை தானே கணபதி யானதுவே. 43

ஆனமண் ணுறிதழ் நாற்கோணம் பொன்னிறம் அஞ்சுகுண
ஈனமில் மூலம துள்ளின் ஒவ்வாகு மிவையுவந்த [ம்
பான மமிர்த முகஞ்சத்தி தேவிசொற் பார்வதியாள்
தானுயர் மந்திர நவ்வாகு நான்முகன் சக்கரமே. 44

கரமா யஜப்பிறை கோணமெண் பத்திதழ் காண்குணமால்
தரமா யருள் வுவப்பலங் காரமுட் டந்தையதாய்
வரமாய தேவி திருமுகம் வாமமா மந்திரமே
திரமாய தோகம நாராய ணுஅரி செய்கையதே. 45

அரிவன்னி செம்மைமுக் கோணமும் மூன்றித ழாறிரண்டா
தரியுண்மை நவ்வுஞ் சிவஞ்சத்தி பார்வதி தானுளதாம் [ங்
பரியுண்ண ரூத்ரம கோர முகமன்பர் பாவமறத்
தெரியுண்மை மந்திரஞ் சிகார முருத்திரன் சேவடியே. 46

அடியான வாயு கறுப்பறு கோணம்பதி ஞறிதழ்மேற்
றிடியா னிரண்டு குணம்பொருட் பேர்வவ்வு தேகலிங்கம்
பிடியான சாம்பவி சத்தி முகந்தற் புருடமருள்
துடியான மந்திர மேவம்ம யேசுரன் தோற்றங்களே. 47

தோற்றிய வானது தூநிற வட்டந் தொடுமிதழ்ரண்
டேற்றிய வோர்குணம் அவ்வாம் பரம்பற் றியேபிரியுஞ்
சாற்றிய பங்கின் மனோன்மணி தேவியீ சானமுகம்
போற்றிய வவ்வரி றீயுஞ் சதாசிவ பூரணமே. 48

பூரண மாகிய வான்கா லனலப்பு பூமியிவை
சாரண மூலமுந் தானுகி யோரிதழ்த் தாமரைமேற்
காரண வவ்வுமென் னுள்ளஞ் சுடர்ப்பிறை காட்சியுமாய்
ஆரண யோகி பராசத்தி தேவிநின் னங்கமதே. 49

ஏயு மிதழ்ப்பத் தொன்றினு நின்றவோ ரெழுத்துறப்பாங்
காயமுட் சக்கர மாறெழுத் தாகுமோர் காத்ரமுயிர்
பாயும் பிரணவ மேபரை தோற்றம் பலசித்திகொண்
டாயு முடற்பொரு ளாவியும் வேட்சுழி யாநந்தமே. 50

களியா தொருவர்க்குத் தோயாதிங் கன்பர்க்குத் தோயும்வெட்ட
வெளியா ணையில்லை மெய்ஞ்ஞான அதீதம் விளங்கியசொற்
றளியா றெழுத்துள் ஆதாரம் ஆறூடு தற்பரைவிட்
டளியா திடத்திற் குருமுரு கோனின் றதிசயமே. 51

அதிசய மாறெழுத் தாறுஞ் சிவமு மறுமுகமாய்க்
கதிசெயு மூரற் பகைநெற்றிக் கண்ணெனக் காட்சியுமாய்
விதிசெயு மாமயில் வேற்சத்தி யாவுங்கை வேற்படையாத்
துதிசெயு மன்பர்முன் னோங்கார வட்டத்துட் டோன்றியதே.

ஓங்கார வட்டத்து ளாதார மாறும்விட் டோங்கியரி
றீங்கார வட்டத்து ளேவிந்து நாத மிணைச்சுடர்மேல்
பாங்காம் பரசிவ மாகியொன் றுயப் பரவெளிநின்
றுங்காரத் தாண்டவி ஆறெழுத் தாறு முகத்தம்மையே. 53

ஆறு முகத்தம்மை வேலாயி நின்னெழுத் தாறுமுரு
வேறு முகத்திற் கிலக்கோர் முகமில்லை வெவ்வினையைச்
சீறு முகத்துக் குமராயி யன்பர்சிந் தித்துநினைப்
பேறு மளித்தவர்க் குள்ளெழுந் தாந்திரற் பெண்கொடியே.

பெண்கொடி யேபர மாயி சிவாயி பிரணவத்தி
நண்கொடி யேமுரு காயி குகாயி நலமுடைய
பண்கொடி யேயென் னுளமே யிரவும் பகலும்விடா
தண்கொடி யாதி சடாக்கரி யீஸ்வரி யம்பிகையே. 55

அம்பிகை ஐம்பத்தோ ரக்கரி யுச்சரி யன்பர்தமை
தம்பிகை வெவ்வினைச் சங்கரி சூலி சரமசரம்
தும்பிகை ஐந்துடை யான்தொழில் வாசி சுகந்தனெனக்
கும்பிகை யம்பர வல்லி சடாக்கரி குண்டலியே. 56

குண்டலி பாரதி லக்குமி பார்வதி கோமளைப்பூ
மண்டலி சாம்பவி தேவி மனோன்மணி வாகினிப்ர
சண்டலி காரிய காரியு காரி சடாக்கரிமா
விண்டலி ஆண்பெண் ணிரண்டுருவாய்நின்ற மின்னொளியே.

மின்னொளி யாயண்ட பிண்ட சராசரம் விண்ணும்மண்ணுந்
தன்னொளி யான சடாக்கரி சாம்ப சதாசிவமென்
றுன்னொளி யீஸ்வரன் ருத்திரன் மாலய னேதரிதாம்
மன்னொளி ஐவர்க்கு மாதாவுந் தையலு மானவளே. 58

மாதா பிதாகுரு தெய்வம் பெறுதவ மற்றுமுள்ள
தாதா வலியிட்ட காமிய மோது சடாக்கரமென்
ருதார மென்ற னுடற்பொரு ளாவி யருட்பலனின்
பாதார விந்தமுந் தந்தென்னைக் காக்கும் பராசத்தியே. 59

பராசத்தி யுத்தமி பாசாங்கு சத்தி பரஞ்சுடர்மா
நிராசத்தி நீறணி பூரணி காரணி நின்மலியாம்
வராசத்தி யாதி வடுகாயி யட்ட வயிரவிநந்
தராசத்தி ருத்ரி சடாக்கரி நிட்களத் தாண்டவியே. 60

தாண்டவி கோரி மகிடா சுரன்சிரந் தட்டழியத்
தீண்டவி பாசு பராக்ரம சூலிநற் சீறரவம்
பூண்டவி ராகி நிராகிபொன் னம்மையென் புன்மையறுத்
தாண்டவி பஞ்ச சபைவல்லி யாறெழுத் தாநந்தியே. 61

ஆநந்தி யம்பை யமைபுவ ளுயிய காரசத்தி
தாநந்தி காலவட வாகினி மாசிவ சம்புபர
மாநந்தி பேதந மாமய ரூபிநி யாதிகமழ்
தேநந்தி பூங்குழல் வாலை புவனை திரிபுரையே. 62

திரிபுரை யாறெழுத் தாங்காரி நங்கலி சிந்தஅறுத்
தெரிபுரை யம்பிகை வம்பரை வேற்கொண் டெறிந்துயிரைப்
பரிபுரை யென்னுள் மேகோயி லன்பருட் பாயலுமாய்
மரிபுரை யென்னகம் நின்னக மாக்கொண்ட மாதங்கியே. 63

மாதங்கி யன்பர் பிறவிக் கடலை வடவனலாய்க்
கோதங்கி முன்னை வினையையுங் கூற்றையுங் கோதியுள்ளத்
தேதங்கி நின்று விளையாடும் பெண்பிள்ளை யென்செவிக்கே
போதங் கிலியையும் சவ்வுமொன் ருகிய பூரணமே. 64

பூரணம் வையெனப் போக்கும் பிறப்பைப் புணர்கிலியுங்
காரண நின்னருட் காட்டிடுஞ் சவ்வெனக் கன்னிகைநின்
ஆரண தற்சொரூ பம்மன வாக்குவை யாறெழுத்தின்
நாரணன் நான்முகன் ஐம்முக ளுய்நின்ற நாயகியே. 65

நாயகி நின்னன்பர் பாதத்தை யர்ச்சிக்கும் நற்கடம்பந்
தோயகி லாரமுஞ் சாந்தமுங் கொன்றைத் தொடையலுநின்
சேயகி லாண்டமென் றேத்திய ஆதி திருமுடிக்கே
யாயகி லாண்டமுந் தேக்குநின் னுறெழுத் தக்கரியே. 66

ஹரிஓம்ந மோத்து சிந்தம் மகரம்முத லவ்வளவும்
தெரிவான மந்திர மோரா றெழுத்துநின் சித்தில்பல
விரிவா கியஅண்ட பிண்ட சராசரம் வேதமெவ்வும்
வரியான துங்கண்ட தவ்வுஞ் சிவாய வசியென்பதே. 67

அவ்வுஞ் சிவாய வசியென்னு மந்திரம் அஞ்சுடன்மூன்
றௌவ்வுஞ் சடாக்கர மும்மண்ட லத்தினு மொட்டவுடன்
கௌவுஞ் சிவஞ்சத்தி யச்சத்தி யாவியைக் காக்குமவ்வுஞ்
சவ்வுஞ் சிவசிவ வென்பா ரிருவினை தானறுமே. 68

அறுமாம் பசுவென்னை ஐயன் குருவந் தானடைந்தோர்
மறுமாதர் கர்ப்பஞ் சிசுநசித் தோர்கள் வதைபலவுஞ்
செறுமாம் பகுதி சிவத்துவத் தீயையுந் தின்னும்நின்னைப்
பெறுமா தவர்க்கெழுத் தாறுங் குடிலைப் பெருநெருப்பே. 69

நெருப்பு நெருப்பு பிரணவ பெண்ணுந்தன் நெஞ்சவஞ்சர்க்
கிருப்பு நெருப்புக் கபாட நின்னிடர்க் கிரவிவெண்ணெய்க்
கருப்பு நெருப்புறை காணார் மெய்க்கண்ட கனிகயிலைப்
பொருப்பு நெருப்பு விருப்புறு ஞானப் பொறிக்கொழுந்தே.

கொழுந்தே மரகதக் குன்றே யிரத்நக் கொடிமுடிபூத்
தெழுந்தே பிரகாசிப் பையிரே மூலகெண் டிசைபுவனந்
தொழுந்தே வருந்தொழில் வேதம் பலவெழு தோற்றத்தெம்மை
அழுந்தா முன்பெற் றெடுத்தா ளரியோமெழுத் தக்கரியே.

ஹரிஓ மரகர வவ்வுஞ் சிவாயங்கி யங்கிசமாங்
கிரிஓ மையுங் கிலியுஞ் சவ்வுஞ் சவ்வுங் கிலியுமையும்
அரிஓஞ் சொருப அருட்செய ம்ரீம்ரீ யுஞ்சிரியும்
திரிஓங் கிலியுஞ் சரஹண வாயி சிவகுருவே. 72

குருவாந் திரிபுர பவநம வாயி குமாரிமகா
திருவாந் திகழொளி யவ்வவ்வு மான சிவக்கடலே
மருவாம் பரிபுர பதசிவ மாநந்த வாரிபெருங்
கருவாஞ் செயலொழி பவநம வாயி கயற்கண்ணியே. 73

கண்ணி யெனுஞ்சர ஹணபவ தேவி கமலனரி
நண்ணூர் புரமெரித் தோன்மூவ ரைப்பெற்ற நாயகியே
பெண்ணீ ரவர்க்குமம் மாவென்று நின்ற பெருஞ்சுடரே
அண்ணீ ரெழுத்திற்குந் தாயாகி வந்த அரும்பொருளே. 74

அஆஇ ஈஉஊ எஏஐ ஓவெனு மைந்தெழுத்தி
இஈஐ ஓஔள நமநாரா யணுவென் றெட்டெழுத்தி
உஊஎ ஏஐஓ ஔவென் ப்வாமைம்பத் தோரெழுத்தி
எஏஐ ஓஔவும் வவ்வுமதாய் நின்ற தம்பிகையே. 75

அவ்வு முவ்வும் ஓவ்வுமவ் வொடுறீங் கொடையுங்கிலியுஞ்
சவ்வும் பரைசிவ மங்குங் கொங்கென்ற சத்தம்மிரண்டும்
ஔவுஞ் சரவண பவவென்ற ஞானத் தொருவனருள்
ஓவ்வு மறிக இரண்டையுந் தாங்கிநின் றோரெழுத்தே. 76

அரிக்கு முதற்பொரு ளெப்பொரு ளும்மண்ட பிண்டமுமங்
குரிக்குஞ் சடாக்கரத் தோசையைப் பற்றுங் குணமறிந்துச்
சரிக்குந் தொழும்பர்க்கு ளாதார மாறுந் தங்குமிருள்
மரிக்கும் பரவெளி யாகுநின் பாதம் வழிப்படுமே. 77

வழிப்படு வாசலில் வாசியுள் வாசலில் வாங்கியப்பாற்
சுழிப்படு மாறெழுத் தங்கியைக் கோத்துச் சுழிக்கவல்லார்
அழிப்படுந் தன்றலை மேலயன் கையெழுத் தஞ்செழுத்துங்
கழிப்படும் பின்பெம ஞேலை யதில்லை கனவினுமே. 78

கனமான மாயமிக் காயம்விட் டாவிக டக்குமுன்னே
மனமான பாவியைத் தன்வச மாக்கி வசியெனுமுற்
பனமான ஏணியி லாறெழுத் தேற்றிநின் பாததரி
சனமான யோகியழியா ரெக்காலமுஞ் சத்தியமே. 79

சத்திய மூலத் திரவியை யூன்றிச் சரநிலைமேற்
பற்றிய தீயிற் சகத்திரத் தெல்லையும் பாழ்படுத்தி
முற்றிய சந்திர கலையூ டுருவி முடிவிலுன்னை
அத்திய சீவன் சிவமாகக் காட்டுநின் னாறெழுத்தே. 80

ஆறெழுத் தானநின் னனந்த மைம்பத்தோ ரக்கரத்திற்
கீறெழுத் தோரெழுத் தைந்தெழுத் தீரெழுத் தேத்திவல
மாறெழுத் தங்கி வடிவாய்க் கடாசல வாசல்புகுந்
தூறெழுத் துண்ணமிர் தஞ்சிவ யோகிக்கி துற்பனமே. 81

உற்பன மாகிய வோங்கார வட்டத்தை யூடுருவி
அற்பன ஆக்கையி னுள்ளே சிவாவெனும் அக்கரத்தைச்
சற்பன பாடைக்குந் தாயா றெழுத்தினுட் டாக்கியப்பால்
நிற்பவன் யோகி தபசழி யாதிது நிச்சயமே. 82

நிச்சிநி லாக்கொழுந் தாறெழுத் தங்கியை நின்மலமாய்
உச்சியு மூலமு நோக்கிரண் டாலமைத் தோரெழுத்தால்
அச்சினை நாட்டிச் சிவாக்கினி மூட்டிநெஞ் சண்டபிண்டம்
வச்சிர யோகி யவனே வயிர மகாசித்தனே. 83

சித்தனுஞ் சீவனுந் தேகமும் வாசியுஞ் சேவைசெய்யும்
பத்தனும் பாசமும் ஆறெழுத் தேத்திப் பதனமதாய்
கத்தனுங் கப்பலுங் காற்றுங் கடலுங் கயிறுங்கள்ள
எத்தனும் பாதையும் பார்த்தோட் டுவார்கரை யேறுவரே.

ஏறுவது கண்செவி மூக்கு நாக்கு நெஞ்சம்மிரண்டு
கூறுசெய் தந்தரங்கத் தேகமது குருவெனவே
தேறுவ தாதியு மந்தமுந் தாங்கிச் சிவநடுவாய்
ஆறுத லம்வரை யாரையும் பார்ப்பதிவ் வாறெழுத்தே. 85

ஆறெழுத் தோரெழுத் தாற்பெறு வாசியை யச்சிமின்றி
ஆறெழுத் தோரெழுத் தாற்கடி வாளமிட் டந்தரங்கத்
தாறெழுத் தோரெழுத் தாற்கல் லணையைவைத் தங்கவடி
ஆறெழுத் தீரெழுத் தோரெழுத் தேற்றிட ஆநந்தமே. 86

அந்தத்தின் பின்கலை யாதியி லேயிடை யாக்கியர
விந்தத்திற் பாய்ந்து சுழிமுனை போய்ப்பெரு வெள்ளத்துள்
பந்தத்த ணற்கதிர் பான்மதி நாதப் பரப்புமுப்பாழ் [ளாய்ப்
இந்தக்கண் காட்சிக்கிப் பாலென்னை யாண்ட இறையிருப்பே.

இறையிருக் கும்திட மெய்தினுங் கந்த னிடம்புகுந்தான்
மறையிருக் குங்கலைக் கொப்பறு மட்டு மருவலன்றிச் [ர்
சிறையிருக் கும்படி யித்தலங் கொஞ்சஞ் சினுக்கைவிட்டோ
துறையிருக் கத்துறை சென்றுடக் கன்னித் தொடக்கறுமே.

தொடக்கறு மின்பமுந் துன்பமுங் காட்டிச் சுமந்தலையும்
விடக்கரு மெய்பொய் விருப்பும் வெறுப்பெனும் வெட்டவெ
நடக்கிற பாதை நடக்க றியாமல் நடக்குமிந்தச் [ளி
சடக்கறுப் பார்மன மற்றதெல் லாங்கெடி சாத்திரமே. 89

சாத்திரம் வேதஞ் சமயம்வண் ணாத்திதண் ணீரில்விட்ட
மூத்திரம் போம்படி போமன னேயந்த மூத்திரமோர்
பாத்திரங் கொள்ளப் பலனுண் டதினொரு பாழுமில்லை
கோத்திர முங்குல முங்குடி போம்நின்னைக் கூடினர்க்கே.

கூடின தாருகைக் கொண்டவ னாரு குருக்களெவன்
பாடின மந்திர மாறுமுன் னன்கும்பொய்ப் பாரிருள்நீ
வீடின போதுமெய்ஞ் ஞான அதீத விலாசவெளி
நாடின தும்மங்கு நின்றதும் நீவள்ளி நாயகமே. 91

நாயக நீயென நானேது நானென்ன நம்பலுன்னைத்
தாயக மென்னுந் தரமே துறுசொல்லுந் தானிறந்தும்
போயக மும்புற மும்போன்ற தாம்பரி பூரணத்தே
யாயக லாதிட மொன்ருகக் காட்சி யறப்பெற்றதே. 92

பெற்ருளும் பொய்பிறப் பித்தானும் பொய்பெண்டிர் பிள்ளையும்
உற்ரு ரும்பொய் யுலகத்தா ரும்பொய் நம்முடற் பயிர்பொய்க்[பொய்
கற்ருர் பிதற்றலும் பொய்சம யாதிக் கடவுளர்பொய்
முற்ரு முலைவள்ளி பங்கனெங் கோன்மெய்யன் முன்னிற்கவே.

முன்னிற்ப தாரவன் முன்னிற்ப தாரு முருகனவன்
என்னிற் கும்வெம் பகலோஇரு ளோதெய்வம் வேறுளதோ
தன்னிற்குந் தன்னிழல் தன்னிட மானவத் தன்மையைப்போல்
உன்னிற்கும் உன்னிழல் நாமுன் னிடத்தி லொடுக்கங்களே.

ஒடுக்கமுந் தோற்றமு முன்னையல் லாதில்லை யுன்னையுன்னிற்
படுக்க விரட்சிக் கவும்பா ரிருவினைப் பந்தமறும்
இடுக்கமு மின்பமு மில்லா திடத்தி லிருவருமற்
றடுக்கவும் உன்றனைச் சென்ருடு தீர்த்தம்வந் தாடினதே. 95

ஆடின பம்பரமோ கயிருே எறிந்தா னிடமோ
சாடின தாபர மோவசை போனதென் றன்னுயிருங்
கூடினதம் மையப்ப னுமுன்றன் படுகு ழியினில்வீழ்ந்
தோடின தெவ்விட மவ்விட நீயென் றுணருவதே. 96

உணராத போத முரையாத வுடற்பொரு ளாவியொன்றைப்
புணராத போகம் புரையற்ற சோதிப் புலன்குழைய
மணவாத வாச மகிழாத ஆநந்த வள்ளிபங்கன்
கணமாகி லென்னைப் பிரியாச் சிவநின்றன் கண்வடிவே. 97

வடிவம் பொருளருள் முக்குணம் வாக்கு மனமுமடி
முடிவுமில் லாத முடிவினைச் சூட்டி முருகனென்றே
படிகந் தனிற்கண்ட காட்சிப் பிரபஞ்ச பார்வையற்றால்
விடியும் பொழுதி லிரண்டுமொன் றேதெய்வம் வேறில்லையே.

இல்லையுண் டென்ப திரண்டுஞ் சொல்லாத இடமதுன்னிக்
கல்லையுஞ் செம்பையும் மண்ணையுங் கூட்டிக் கனிவுறுதல்
ஒல்லையிற் போன வுயிருடன் கூடி யுதவிசெய்யா
தல்லையிற் சுத்தத் தவராக அன்புற் றரற்றுவதே. 99

அரற்றலு மக்களிப் பும்மின்ன தென்னவோ ராகமத்தாற்
பரத்தலும் பேசப் படாமையு மெங்கும் பராபரமாய்
நிரத்தலு மொன்று நிரவா தமையு நினைப்புமறப்
பிறத்தலு மெய்தலு மில்லாத தோற்றநீ யெவ்வண்ணமே.

எவ்வண்ண மெவ்வுரு வெவ்வுயி ரெவ்விட மென்றறியாச்
செவ்வண்ண வூமன் கனவுரை யற்றநின் சேவடியாய்ச்
சவ்வண்ண மென்றரன் சங்கரி கோபத்தைத் தான்கவர்ந்த
தவ்வண்ண மாதி மறைபேச வைய மறிந்ததுவே. 101

வையஞ் சலமங்கி கால்வான் பலவுயிர் வான்முடியோ
டெய்யும் பரமுதல் சார்வதெல் லாமெம் பிரான்முருகா
தெய்யென நின்றுநின் தாட்சிலம் போசைத் திருவிளையாட்
டைய்யநின் னங்கம தென்னங்க மாய்நின்ற ஆநந்தமே. 102

சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.